**மண்முனை தென்மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**
**-------------------------------------------------------**

1. நிதிக் கூற்றுக்கள்
----------------------------

1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்
----------------------------------------------------------

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்பிரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
---------------------------------------------------

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
-------------------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்
---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்ப தற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்
-------------------------------------------

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டின் இறுதிவரை மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்படவேண்டிய நிலுவை முத்திரை தீர்வையானது ரூபா 1,300,000 தொகையால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து | பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை அடிப்படையாக வைத்து நிலுவைத்தொகைகள் கணக்கு கொண்டுவரப்படவேண்டும் | பிரதேச சபையினால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள முத்திரைத் தீர்வை நிலுவை ரூபா.5,367,150 ஆகும். இது காணிப்பதிவாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டுள்ளது.<br>(ஆ) பிரதேச சபையினால் முத்திரை தீர்வை மீது வழங்கப்பட்ட கழிவு ரூபா 85,332 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவேண்டும் | எதிர்வரும் நிதி ஆண்டுகளில் கணக்கிட்டு கணக்குகள் தயாரிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (இ) முத்திரை தீர்வையானது பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை ரூபா 110,000 தொகை கணக்காய்வுத் திகதியான 31 மார்ச் 2019 வரை பிரதேச சபைக்கு கிடைக்கப் பெறாததுடன், இத் தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை. | கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு இவ் அறவிடு தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு முத்திரை தீர்வையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | முத்திரை தீர்வை கிடைக்கப் பெற்றதும் கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தயவுடன் அறியத் தருகின்றேன். |

1.3.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

(அ) தகவல் சமர்ப்பிக்கப்படாமை

ரூபா 195,232,508 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரியதாக எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த செய்ய முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) காணிகளும் கட்டிடங்களும் | 182,319,063 | காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு எமது சபையில் காணப்பட்ட போதிலும் இது இற்றைப்படுத்தப்படாமல் உள்ளது. தற்போது இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) பொறி இயந்திரம் | 3,005,923 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iii) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 11,750,000 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iv) மின்சார களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 48,216 | இருப்புப் பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை | நிலையான சொத்துப் பதிவேடு எமது சபையில் காணப்பட்ட போதிலும் இது இற்றைப்படுத்தப்படாமல் உள்ளது. தற்போது |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) குடிநீர் குழாய் இணைப்பு | 1,993,786 | மதிப்பீட்டு அறிக்கை, வேலை முடிவுறுத்தல் அறிக்கை மற்றும் பற்றுச்சிட்டை | உறுதிப்படுத்தும் சான்றுகள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையிடம் இருந்து மதிப்பீட்டு அறிக்கை மற்றும் வேலை முடிவுறுத்தல் அறிக்கை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனா ன தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கை களை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்காக சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை இக்குழுக்களை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. | உரிய விதிகளுக்கமைய நிலையிற்குழுக்கள் அமைக்கப்பட்டடு அவை உரிய முறையில் செயற்படுத்தப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் | பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட இக்குழுக்கள் 2019 ஆம் ஆண்டு முதல் முறையாக இயங்கும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு | பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளுக்கமைய உரிய கூற்றுகளை |

| | | | |
|---|---|---|---|
| நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |
| (இ)IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | தனியான பதிவேடுகள் 2019 முதல் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,357,433 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,410,502 தொகையாக ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 1,946,931 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 660,350 | 784,780 | 709,375 | 75,405 | 660,350 | 650,350 | 515,920 | 134,430 |
| வாடகைகள் | 924,450 | 1,060,498 | 1,060,498 | --- | 954,600 | 804,600 | 804,600 | --- |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,145,450 | 691,655 | 691,655 | --- | 1,145,600 | 1,156,585 | 1,156,585 | --- |
| ஏனைய வருமானம் | 45,924,500 | 57,679,812 | 46,815,262 | 10,864,550 | 43,562,200 | 50,954,310 | 39,109,079 | 11,845,231 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### 2.2.2.1 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 மற்றும் 140(1) பிரிவுகளுக்கமைய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள வட்டாரங்களிலும் சோலைவரி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் தற்காலிக சோலைவரி மாத்திரம் அறவிடப்படாததுடன் ஆதனங்கள் விலை மதிப்பீடு செய்யப்பட்டு சோலைவரியை நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | பிரதேச சபையின் கட்டளைகள் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | சோலை வரியானது தற்காலிகமாகவே அறவிடப்படுகின்றது. சோலைவரி விலை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது பின்னர் சபையின் வருமானம் அதிகரிக்கும் எதிர்பார்க்கின்றோம் |

### 2.2.3 ஏனைய வருமானம்

JCB இயந்திரத்தின் பயன்பாடு

தங்கள் பிரதேச சபையினால் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் (LLDF) கீழ் JCB இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 2017 பெப்பரவரி மாதத்தில் மேற்படி நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து குறித்த இயந்திரத்தை கொள்வனவு செய்தது. இவ்வியந்திரத்தன் பயன்பாடு தொடர்பான விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ----------------------- | ----------------- | ----------------------------------------------- |
| (அ) பிரதேச சபையினால் இவ்வியந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி இன்மையால் சபையானது உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கடன் பெற்று, JCB இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டு சபை நிதியில் ரூபா 2,300,000 தொகை மற்றும் கடன் நிதியின் மூலம் ரூபா 9,200,000 தொகையும் கொண்டு ரூபா 11,500,000 தொகைக்கு சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இவ்வியந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், சபையானது இவ்வியந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் நட்டத்தையே எதிர்நோக்கியுள்ளது. | இவ்வாறான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும் போது எதிர்காலத்தில் சபைக்கு கிடைக்கும் வருமானம் அவற்றின் மூலமான அபிவிருத்திகள் தொடர்பில் ஆய்வு செய்து கொள்வனவு செய்தல் சிறந்தது. | வருமானம் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) மீளாய்வாண்டில் இவ்வியந்திரம் தனியார் வேலைகளுக்கு, சபை வேலைகளுக்கு மற்றும் உயர் அதிகாரிகளால் விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கு வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற போதிலும், கணிசமான நேரங்களில் மாத்திரம் தவிசாளர் மற்றும் செயலாளரின் அனுமதி பெறப்படுகின்றது எனைய நேரங்களில் எவ்விதமான அனுமதியுமின்றி குறித்த இயந்திரம் வேலைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவ் இயந்திரத்தின் பயன்பாடுகள் தொடர்பான முறையான செயற்திட்டம், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அறிக்கை தயாரித்தல் என்பன முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாவனையின் போதான உரிய அனுமதிகள் பெறப்படவேணடும் | உள்ளகக் கட்டுப்பாடுகள் இன்மை சபையின் பாரிய குறைபாடாகும். இக்குறைபாடு நிவர்ததிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

2.2.4 முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 847,800 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 4,135,196 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

(அ) நீதிமன்ற தண்டப்பணம்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 847,800 தொகை நீதிமன்ற தண்டப்பணமானது 2017 யூன் தொடக்கம் திசெம்பர் வரைக்குமான நிலுவைகளாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு இறுதிவரைக்குமான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2019 மே 08 ஆம் திகதிவரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | மீளாய்வாண்டில் பெறப்படவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) முத்திரைக் கட்டணங்கள்

பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற ஆதனங்களின் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வையை மட்டக்களப்பு மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறிவிடப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்தி டமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | முத்திரை தீர்வை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது முத்திரை தீர்வை தொடர்பான ஆவணங்கள் மாகாண இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. |
| (ii) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் | கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் | மேலதிக முத்திரை தீர்வை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 110,000 தொகை ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை, கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேணடும். இருந்தும், பிரதேச சபையினால் 05 உபவிதிகள் தயாரிக்கப்பட்டு சபையினால் 2012 ஆம் ஆண்டு பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளுராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | உபவிதிகள் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 13 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தும், அனுமதி பெறவதற்காக தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 13 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிராகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | நிலைபெறான அபிவிருத்தி இலக்கு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (m) gpuNjr சபையினால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 4,000,000 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 1,993,786 ஆக மொத்தம் 5,993,786 தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபைக்கு பண்டாரியாவெளி, கற்சேனை, மாவடிமுன் மாரி போன்ற இடங்களில் உள்ள குடும்பங்களுக்கு நீர் வழங்கல் சேவையை பெற்றுகொள்வதற்காக வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 30 ஆம் திகதிவரை இவ் செயற்திட்டம் குறித்த பூர்த்தி செய்யப்பட்டமை, தொடர்பான அறிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பொது மக்களுக்குரிய சேவையை நிறைவேற்ற துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் இருந்து அறிக்கைகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, பின்வரும் பதவிகளுக்கு ஏதிரே வெற்றிடம் மற்றும் மேலதிக ஆளணிகள் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | ஆளணி தொடர்பாக முறையான திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும் | சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஊழியர் பற்றாக்குறை காணப்படுவதால் பதிலீட்டு அடிப்படையில் ஊழியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். |
| (ii) சபைக்கு தேவையான வேலைத் தொழிலாளிகள் மற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் 08 தொழிலாளர்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்த போதிலும், சபையனாது பதிலீட்டு அடிப்படையில் மேலும் 13 பேரை நியமித்துள்ளது. | சபைக்கு தேவையான வேலைத் தொழிலாளிகள் மற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் தொடர்பில் முறையான ஆளணி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். | |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்கு சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை ஒப்பந்தத்தில் பிணை ஆவணம் பெறப்படவேண்டும் என கூறப்பட்டுள்ள போதிலும், அத்தகைய ஆவணம் அல்லது பிணைப்பணம் பெறப்படுவதில்லை. இதனால், குத்தகைக்கு சொத்துக்களை பெற்றவர்கள் குத்தகைப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் சபையானது வருமானத்தை இழக்கவேண்டி நேரிடலாம். | சட்ட எற்பாடுகளுக்கு அமைய, செயற்படுத்தப்படவேண்டும். | சபைக்கு சொந்தமான ஆதனங்ளை குத்தகைக்கு வழங்கும் போது பிணைப்பணம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது |
| (ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 மற்றும் 2018 யூன் மாத இறுதி வரைக்குமான காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மொத்த பெறுமதி ரூபா 55,248,300 தொகையில் வரியாக ரூபா 552,483 தொகையை அறவிட சபை நடவடிக்கையெடுத்திருக்கவில்லை. இதனால் சபையானது வருடாந்தம் அண்ளளவாக ரூபா 1,000,000 தொகையை இழக்க நேர்ந்துள்ளது. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | விற்பனை வரிகள் மீதான 1% விற்பனை வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க நிர்வாக, மாகாணசபைகள் உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சினால் மோட்டார் கிறேடர் இயந்திரம் ஒன்று 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இருந்தும், | நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கும் அதன் முன்னைய வருமானத்தை கருத்தில் கொண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | மோட்டார் கிறேடர் இயந்திரம் திருத்தம் செய்வதற்கு போதுமான நிதி சபையில் காணப்படாததால் இவ்வியந்திம் திருத்தப்படாமல் உள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

2016 திசெம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை குறித்த இயந்திரத்தின் எஞ்சின் பழுது காரணமாக சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவ்வியந்திரத்தின் திருத்தி வருமானம் ஈட்டும் நடவடிக்கைக்காக பயன்படுத்தாது எவ்வித பாவனையின்றி சபையில் வைத்துள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | முறையாக திட்டமிடப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இவ்வருடம் முதல் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | முறையாக திட்டமிடப்பட்டு உள்ளக கணக்காய்வு ஏற்பாடகளுக்கு அமைய செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும | இவ்வாண்டு முதலாவது கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் 02.05.2019ம் திகதி நடைபெற்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |